<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 121/2017

பி.வா.சா.1 – எ.ஜி.ராமகிருஷ்ணன்

<u>10–09–2024 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் ஏற்கனவே முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

04.03.1994 – இந்திராணி பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.18** ஆகும்.

08.12.2020 – முத்துச்சாமி பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.19** ஆகும்.

03.09.2024 – திருப்பூர் வடக்கு வேலம்பாளையம் பட்டா எண் 6667 க்குரிய நத்தம் பட்டா கணினி நகல் **பி.வா.சா.ஆ.20** ஆகும்.

02.09.2024 – 1.1.1980 முதல் 01.09.2024 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.21** ஆகும்.

10.09.2024 – 1.1.1990 முதல் 31.12.2000 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.22** ஆகும்.

04.04.2024 ம் தேதிய வில்லங்கச் சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.23** ஆகும்.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) பழனிச்சாமி சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பழனிச்சாமிக்கும் எனக்கும் விரோதம் இல்லை என்றால் சரிதான். தற்போது சாட்சி கடைசியில் விரோதம் ஏற்பட்டதால் நீதிமன்றம் சென்றதாக கூறுகிறார். எம்.கே.பழனிச்சாமி இறக்கும்வரை விரோதம் இல்லை என்றால் சரியல்ல விரோதம் ஏற்பட்டு நீதிமன்றம் சென்று கிரயம் பெற்றேன். எந்த தேதியில் பிரச்சினை என்றால் தேதி தெரியாது. 2016 ம் ஆண்டில் இருந்து பிரச்சினை ஏற்பட்டது.

2) பழனிச்சாமி இறப்பதற்கு முன்பு எனக்கு கிரயம் ஏற்படுவதற்கு முன்பு அவர் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததற்கு ஆவணம் கொடுத்தாரா என்றால் 2015ம் ஆண்டு ஆவணம் காண்பித்தார். ஒப்பந்தம் எப்போது போடப்பட்டது என்றால் 01.04.2015ம் தேதி போட்டோம். பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. பதிவு அலுவலகம் சென்று பழனிச்சாமியை பதிவு செய்து கொடுக்கும்படி கேட்டேனா என்றால் 2016ம் ஆண்டு கேட்டேன். தேதி தெரியாது. அதன்பிறகு நீதிமன்றம் சென்றேன். நீதிமன்றத்தின் மூலம் கிரயம் பெற்றேனா என்றால் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்து தீா்ப்பு ஏற்பட்ட பிறகு பழனிச்சாமி பதிவு அலுவலகம் வந்து கிரயம் செய்து கொடுத்தார்.

3) கிரயம் ஏற்பட்ட ஆவணத்தில் பிழை உள்ளதா என்றால் ஆமாம். சர்வே எண் பிழையாக உள்ளது. பிழைதிருத்தல் பத்திரம் பழனிச்சாமி எழுதிக் கொடுக்கவேண்டும். வாதிகள் கொடுத்த பொது அறிவிப்பிற்கு பிறகு ஆட்சேபைடிண செய்தீர்களா என்றால் நான் பேப்பர் பார்ப்பதில்லை. நத்தம் என்றால் என்ன என்றால் எனக்கு சரியாக தெரியாது. பாரம்பரியாக விவசாய பூமி. தாவா சொத்திற்கு நத்தம் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு நான்கு புற சொத்துக்களுக்கு என்ன பட்டா கொடுத்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் பட்டா கொடுத்தது தெரியும் யாருக்கு கொடுத்தார்கள் என்று தெரியாது.

4) தாவாச் சொத்தின் க.ச.எண்.365 என்றால் சரிதான். விஸ்தீரணம் என்ன என்றால் 11.88 ஏக்கர். அதில் குமாரசாமி செட்டியாருக்கு 5.54 ஏக்கர் பாத்தியம். 5.54 ஏக்கர் சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. மீதமுள்ள சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. 5.54 ஏக்கர் சொத்து குமாரசாமி செட்டியாருக்கு வந்தது மட்டும் தான் எனக்குதெரியும். மீதமுள்ள 5.54 ஏக்கர் சொத்து எங்குள்ளது என்றால் என் சொத்துக்கு தெற்குபுறமுள்ளது. தாவா சொத்துக்கான மூல ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அசல் ஆவணத்தை பார்த்தது இல்லை நீதிமன்ற ஆவணத்தை பார்த்துள்ளேன்.

5) குமாரசாமி செட்டியாா் 5.54 ஏக்கர் சொத்தை மனையிடங்களாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மனைகள் பிரித்த வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. பாகப்பிரிவினை

பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. தென்புறமுள்ள 5.54 ஏக்கர் சொத்தை 1948 ல் கிரயம் பெற்ற ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. க.ச.எண்.365 பட்டா நிலம். அது எப்படி நத்தம் நிலமாக மாறியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எவ்வளவு சொத்துக்கள் நத்தமாக மாறியது என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6) தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 04.12.1994 ம் தேதி இந்திராணி பெயரிலான கிரய ஆவணத்தின் நகல் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.19 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் சொத்துக்கு அருகிலுள்ள நபரின் கிரய ஆவணம் என்பதால் தாக்கல் செய்துள்ளேன்.

7)பி.வா.சா.ஆ.19 ல் சொத்து முத்துச்சாமி இடத்திற்கு வடக்கு என சொல்லப்பட்டுள்ளது. எம்.கே.பழனிச்சாமி ஏற்கனவே விற்பனை செய்த இடத்திற்கு வடக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துச்சாமி சொத்துக்கு வடக்கு என்று பி.வா.சா.ஆ.19 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.23 எப்போது வாங்கினீர்கள் என்றால் 2 நாட்களுக்கு முன்பு வாங்கினேன். யார் பெயரில் வாங்கினீர்கள் என்றால் என் பெயரில் வாங்கினேன். பி.வா.சா.ஆ.23 ல் என் பெயருள்ளதா என்றால் இல்லை. கணினி மூலம் பெற்ற நகல் அதில் பெயர் வராது.

8) பி.வா.சா.ஆ.20 நத்தம் பெயரில் பட்டா உள்ளது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 ல் 50 நபர்கள் எந்தெந்த சொத்துக்களில் உள்ளார்கள் என குறிப்பிட்டு இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 751 என்று மட்டும் உள்ளது. குறிப்பாக விவரங்கள் இல்லை. 751 உட்பிரிவுகள் பற்றி குறிப்பிட்டுள்ளத. பி.வா.சா.ஆ.20 ன்படி பட்டா 139 நபர்கள் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண் 365 மற்றும் 365/3 பட்டா யார் பெயரில் உள்ளது என்று பி.வா.சா.ஆ.20 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 பட்டாவில் 50 காலைகள் பொறுத்து குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

9) பி.வா.சா.ஆ.20 க.ச.எண்.751 என் பெயரிலுள்ளது என்று குறிப்புகள் இல்லை என்றால் என் பெயருள்ளது. தனிப்பட்ட முறையில் இல்லை என்றால் சரிதான். க.ச.எண்.365 எத்தனை உட்பிரிவுகள் ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவாச் சொத்து எந்த உட்பிரிவில் வருகிறது என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மேலும் குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.09.10 17:28:14 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.